71. மௌலானா சத்ருதீன் மதரசா உள்ள இடம் ______.

(1) ஔரங்காபாத் (2) டெல்லி (3) ஷாஜஹானாபாத் (4) ஹைதராபாத்

72. கீழ்க்கண்டவற்றில் தவறான கூற்று எது?

(1) தாமஸ் மன்றோ கல்வியின் நிலை குறித்து அறிய ஒரு குழுவை அமைத்தார்.

(2) மன்றோவின் கல்விக்குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் 3 முதன்மைப் பள்ளிகளை அமைக்கப் பரிந்துரைத்தது.

(3) உட்ஸ் கல்வி அறிக்கை சென்னை மாகாணத்தில் பொது வழிகாட்டும் துறையை ஏற்படுத்தியது.

(4) தேசியக் கல்விக் கொள்கை வரைவுக்குழு 2019 இல் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது.

73. பொருத்துக.

| | | | |
|---|---|---|---|
| i. கியாசுதீன் மதரசா | - | a. ஸ்ரீரங்கம் |
| ii. அஹோபில மடம் | - | b. கல்கத்தா |
| iii. எல்பின்ஸ்டன் கல்லூரி | - | c. பம்பாய் |
| iv. பிஷப் கல்லூரி | - | d. டெல்லி |

(1) i - d ii - a iii - d iv - c (2) i - d ii - c iii - b iv - a

(3) i - c ii - a iii - b iv - a (4) i - d ii - a iii - c iv - b

74. அஹோபில மடத்தில் தங்கித் தன் பங்களிப்பைக் கல்விக்காக வழங்கியவர்

(1) ஸ்ரீராமானுஜர் (2) பெரியாழ்வார்

(3) ஸ்ரீராமதாசர் (4) கூரத்தாழ்வார்

LIVEWORKSHEETS

75. பிரான்சிஸ் சேவியர் எந்த அமைப்பின் உறுப்பினர்?

(1) இவாஞ்சிலிஸ்டிக் (2) பிஷப் மிஷனரி

(3) கிழக்கிந்தியக் கம்பெனி (4) ஏசு சங்கம்

76. கிறித்தவர் அல்லாத குழந்தைகளுக்குக் கல்வியளித்த முதல் சமயப்பரப்பு அமைப்பு

(1) இவாஞ்சிலிஸ்டிக் (2) மதரசாக்கள்

(3) அஹோபில மடம் (4) ஏசு சங்கம்

77. இவர்களில் எவர் இவாஞ்சிலிஸ்டிக் அமைப்பைச் சார்ந்தவர்?

(1) பிரான்சிஸ் சேவியர் (2) ஜான் கிர்னாண்டர்(

3) டாக்டர் சி.எஸ்.ஜான் (4) சீகன்பால்கு

78. சீகன்பால்கு மற்றும் புளூட்சோ எந்நாட்டைச் சார்ந்தவர்கள்?

(1) இங்கிலாந்து (2) ஜெர்மனி (3) போர்ச்சுகல் (4) பிரான்ஸ்

79. சீகன்பால்கு மற்றும் புளூட்சோ ஆகியோர் எங்குக் கல்லூரியைத் துவங்கினர்?

(1) திருவாரூர் (2) திருவிதாங்கூர் (3) பம்பாய் (4) கல்கத்தா

80. கல்கத்தாவின் முதல் பேராயர் யார்?

(1) Dr.மிடில்டன் (2) Dr.சி.எஸ். ஜான் (3) புளூட்சோ (4) சேவியர்

81. கல்கத்தாவில் பிஷப் கல்லூரியைத் துவங்கியவர் யார்?

(1) Dr.மிடில்டன் (2) Dr.சி.எஸ். ஜான் (3) புளூட்சோ (4) சேவியர்

82. ஆங்கில ஆட்சியின் கல்வி வரலாற்றை எத்தனை கட்டங்களாகப் பிரிக்கலாம்?

(1) 3 (2) 5 (3) 4 (4) 2

83. மவுண்ட் எல்பின்ஸ்டன் ஓய்வு பெற்ற ஆண்டு

(1) 1854 (2) 1929 (3) 1827 (4) 1812

LIVEWORKSHEETS

84. கல்விக்காகத் தங்கள் பங்களிப்பை வழங்கிய இக்குழுவினருள் பொருந்தாதவர்?

(1) இராஜா ராம்மோகன்ராய் (2) பச்சையப்பர்

(3) பிரேசர் (4) பிரான்சிஸ் சேவியர்

85. பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடு.

(1) இராஜா ராம்மோகன்ராய் - வங்காளம்

(2) பச்சையப்பர் - சென்னை

(3) பிரேசர் - பம்பாய்

(4) யுவான் சுவாங் - சீனா

86. கல்விக்கொள்கை, பயிற்றுமொழி ஆகியனவற்றில் கருத்து வேறுபாடுகள் அதிகம் கொண்ட ஆங்கில ஆட்சியின் காலகட்டம் எது?

(1) முதல் கட்டம் (2) இரண்டாம் கட்டம்

(3) மூன்றாம் கட்டம் (4) நான்காம் கட்டம்

87. பொருத்துக.

i. கீழ்திசைவாதிகள் - a. ஆங்கிலம்

ii. ஆங்கில சார்பு கோட்பாட்டுவாதிகள் - b. சமஸ்கிருதம், பாரசீகம்

iii. மூன்றாவது பிரிவினர் - c. இந்திய மொழி

(1) i - c ii - a iii - d (2) i - a ii - c iii - b

(3) i - c ii - a iii - b (4) i - b] ii - a iii - c

88. அகில இந்தியக் கல்விக் கொள்கையின் காலம் என்றழைக்கப்படும் ஆங்கில ஆட்சியின் காலகட்டம் எது?

(1) முதல் கட்டம் (2) இரண்டாம் கட்டம்

(3) மூன்றாம் கட்டம் (4) நான்காம் கட்டம்

89. ஆங்கிலேயக் கல்வி வரலாற்றில் செல்வாக்கு மிக்க மூன்றாம் கட்டம் எந்த ஆண்டில் தொடங்குகிறது?

LIVEWORKSHEETS

(1) 1854 (2) 1929 (3) 1827 (4) 1812

90. உட்ஸ் கல்வி அறிக்கையின் குறைபாடு என்ன?

(1) இது அனைத்துத் தரப்பினருக்கும் கல்வியைப் பரிந்துரை செய்யவில்லை.

(2) இதன்படி உயர் வகுப்பினர் மட்டுமே ஆங்கிலம் பயில முடியும்.

(3) இந்தி மொழிப்பாடம் கட்டாயமாக்கப்பட்டது.

(4) இந்தியர்களின் பண்பாடு, கொள்கைகள் விலக்கி வைக்கப்பட்டது.

91. ஆங்கிலேயக் கல்வி வரலாற்றில், நான்காம் கட்டம் __________ காலமாகும்.

(1) செல்வாக்கு மிக்க (2) அலட்சியமான

(3) கருத்து வேறுபாடுகள் கொண்ட (4) சுயாட்சி

92. பொருத்துக.

i. உலகப் பெருமந்தம் - a. 1968

ii. முதல் தேசியக்கல்விக் கொள்கை - b. 1971

iii. தொலைதூரக் கல்வி - c. 1929

iv. தேசியக் கல்விக் கொள்கை வரைவுக் குழு - d. 2017

(1) i - d ii - a iii - d iv - c (2) i - d ii - c iii - b iv - a

(3) i - c ii - a iii - b iv - d (4) i - b ii - a iii - c iv - d

93. மாகாண அமைச்சர்களின் நிலையை வலுப்படுத்தியது எது?

(1) 1935 ம் ஆண்டு அரசுச் சட்டம்

(2) 1854 ம் ஆண்டு உட்ஸ் கல்வி அறிக்கை

(3) 1909 ம் ஆண்டு மாகாண சுயாட்சி

(4) 1929 ம் ஆண்டு சார்ஜண்ட் அறிக்கை

94. வார்தா கல்வித் திட்டத்தின் அச்சாணியாக இருந்தது எது?

(1) இயற்கை வழிக் கற்றல் (2) அகிம்சை

(3) குழந்தை மையக் கற்றல் (4) சுதந்திர உணர்வு

LIVEWORKSHEETS

95. பொருத்துக.

i. அனைவருக்கும் கல்வி இயக்கம் - a) 1952 - 53

ii. இடைநிலைக் கல்விக் குழு - b) 2000 - 01

iii. இடைநிலைக் கல்வி அளவில் இலவசக்கல்வி - c) 2018 - 19

iv. முன்பருவம் முதல் 12ம் வகுப்பு வரை பாகுபாடின்றி முழுமையான கல்வி - d) 1964 - 65

(1) i - a ii - b iii - c iv - d (2) i - b ii - a iii - d iv - c

(3) i - b ii - c iii - d iv - a (4) i - b ii - a iii - c iv - d

96. கல்வியில் புதிய அமைப்பு முறைகளையும், பாடப்புத்தகங்களின் தரம், பாடத்திட்டம், கற்பித்தல் முறைகளில் முன்னேற்றங்களையும் பரிந்துரைத்த குழு எது?

(1) ராதாகிருஷ்ணன் கல்விக் குழு (2) இடைநிலைக் கல்விக் குழு

(3) கோத்தாரிக் கல்விக் குழு (4) பல்கலைக்கழக மானியக் குழு

97. 10+2+3 கல்வி அமைப்பைப் பரிந்துரைத்த குழு எது?

(1) ராதாகிருஷ்ணன் கல்விக் குழு (2) இடைநிலைக் கல்விக் குழு

(3) கோத்தாரிக் கல்விக் குழு (4) பல்கலைக்கழக மானியக் குழு

98. கீழ்க்கண்ட கூற்றுகளில் சரியானவை எவை?

(அ) புதிய தேசியக் கல்விக் கொள்கை, கிராமப்புற இந்தியாவில் ஏற்றத்தாழ்வுகளை நீக்குதலை வலியுறுத்தியது.

(ஆ) புதிய தேசியக் கல்விக் கொள்கை, குழந்தை மைய அணுகுமுறையை வலியுறுத்தியது.

(இ) முதல் தேசியக் கல்விக் கொள்கை, கரும்பலகைத் திட்டத்தை அறிமுகப்படுத்தியது.

(ஈ) திருத்தப்பட்ட தேசியக் கல்விக் கொள்கை, பணியிடைப் பயிற்சியைப் பரிந்துரைத்தது.

LIVEWORKSHEETS

(1) அ தவிர அனைத்தும் (2) ஆ தவிர அனைத்தும்

(3) இ தவிர அனைத்தும் (ஈ) அ தவிர அனைத்தும்

99. கீழ்க்கண்ட கூற்றுகளில் தவறான கூற்று/கூற்றுகள் எது/எவை?

(1) முதல் தேசியக் கல்விக்கொள்கையின் நோக்கங்கள் தேச முன்னேற்றத்தை ஊக்குவித்தல், தேசிய ஒருமைப்பாட்டினை வலுப்படுத்துதல் ஆகியன ஆகும்.

(2) புதிய தேசியக் கல்விக் கொள்கையின் நோக்கம் ஒரு நிலையான, துடிப்பான சமுதாயத்தை உருவாக்குவதாகும்.

(3) இவை இரண்டும்.

(4) இவற்றில் எதுவுமில்லை.

100. எப்போது வரை கல்வி மாநிலப் பட்டியலில் இருந்தது?

(1) டிச. 1974 (2) நவ. 1976 (3) டிச. 1976 (4) அக். 1986

101. இந்திய அரசின் முதன்மைத் திட்டம் இவற்றுள் எது?

(1) SSA (2) RMSA (3) SAMAGRA SIKSHA (4) RTE

102. இவற்றுள் எது அனைவருக்கும் கல்வித் திட்டத்தின் செயல்பாடு இல்லை?

(1) பள்ளி மேலாண்மைக் குழு அமைத்தல்.

(2) மாணவர்களுக்கு உதவித் தொகை வழங்கல்.

(3) மதிய உணவு வழங்குதல்.

(4) முன்பருவக்கல்வி வழங்குதல்.

103. அனைவருக்கும் இடைநிலைக் கல்வித்திட்டம், எந்த வயது பிரிவினருக்குக் கல்வி அளிப்பதை நோக்கமாகக் கொண்டது?

(1) 6-14 (2) 15-16 (3) 3-17 (4) 11-14

104. சமமான வாய்ப்புகள் மற்றும் சமமான கற்றல் விளைவுகளை அளவிடுதல் ஆகிய பள்ளியின் செயல்திறனை மேம்படுத்துவதற்கான குறிக்கோளை அடைய ஏற்படுத்தப்பட்ட திட்டம் எது?

LIVEWORKSHEETS

(1) SSA (2) RMSA (3) SAMAGRA SIKSHA (4) RTE

105. SSA, RMSA ஆகிய இரண்டு திட்டங்களை உள்ளடக்கிய திட்டம் எது?

(1) கரும்பலகைத் திட்டம் (2) RTE

(3) மேம்படுத்தப்பட்ட RMSA (4) SAMAGRA SIKSHA

106. யுவான் சுவாங் குறிப்புகளின்படி, கற்றலின் மையமாக விளங்கிய நகரம் எது?

(1) பனாரஸ் (2) மதுரை (3) காஞ்சிபுரம் (4) நாளந்தா

107. தமிழ் இலக்கிய வரலாற்றில் மிகவும் அறிவார்ந்த மற்றும் புதுமைகளைப் புகுத்திய காலம் எது?

(1) பாண்டியர் காலம் (2) சோழர் காலம்

(3) பல்லவர் காலம் (4) சேரர் காலம்

108. பல்லவர் காலத்தில் கல்வி நிறுவனங்கள் எவ்வாறு அழைக்கப்பட்டன?

(1) கடிகை (2) சாலை (3) வித்யாசாதனம் (4) பள்ளி

109. பாண்டியர் காலத்தில் கல்வி நிறுவனங்கள் எவ்வாறு அழைக்கப்படவில்லை?

(1) கடிகை (2) சாலை (3) வித்யாசாதனம் (4) பள்ளி

110. கீழ்க்கண்டவற்றில் வேதக் கல்லூரி அமைந்திருந்த இடம் எது?

(1) எண்ணாயிரம் (2) திருப்புவனை

(3) 1 மற்றும் 2 (4) இவை எதுவுமில்லை

111. திருவாடுதுறைக் கல்வெட்டு எவர் காலத்திய கல்வெட்டு?

(1) ராஜராஜ சோழன் (2) வீரராஜேந்திர சோழன்

(3) வீரப்ப நாயக்கர் (4) இரண்டாம் சரபோஜி

112. வீரப்ப நாயக்கர் காலத்தில் மதுரையில் தொடக்கப் பள்ளியை நிறுவியவர்?

(1) பிரான்சிஸ் சேவியர் (2) சீகன் பால்கு

(3) பெர்னாண்டஸ் (4) புளூட்சோ

LIVEWORKSHEETS

113. மதராஸ் மாகாணத்தில், எந்த ஆண்டுவாக்கில், ஆங்கிலப் பாடம் தவிர அனைத்துப் பாடங்களும் தமிழ் மொழியில் கற்பிக்கப்பட்டன?

(1) 1929 (2) 1971 (3) 1938 (4) 1954

114. சர்.தாமஸ் மன்றோ சென்னை ஆளுநராக இருந்த காலகட்டம் எது?

(1) 1905-09 (2) 1920-27 (3) 1921-47 (4) 1820-27

LIVEWORKSHEETS